நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம்,
திண்டுக்கல்.
முன்னிலை: திரு. எஸ். பாக்கியராஜ், B.Sc., B.L.,
நீதித்துறை நடுவர் எண். 1
2025 ம் ஆண்டு அக்டோபர் 17 –ம் நாள் வெள்ளிக்கிழமை

**M.P.No.14/2025**

**in**

**C.C..No.128/2018**

**வழக்கின் தரப்பினர்களின் பெயர் விவர குறிப்பு**

**சாந்தி, 45/2018**
**க/பெ.துரைராஜ்,(லேட்)**
**க.எண்.47, T.அய்யம்பாளையம்,**
**தாடிகொம்பு வழி,**
**திண்டுக்கல் மாவட்டம்.** **= மனுதாரர்/எதிரி**

**//எதிராக //**

**ஜோசப் வேலுச்சாமி,**
**த/பெ.வீருகேத்தயகவுடர்(லேட்)**
**கோனூர்,**
**கசவணம்பட்டி கிராமம்,**
**திண்டுக்கல்.** = எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுதாரர்/எதிரி சார்பாக வழக்கறிஞர் திரு.B.S.கர்ணன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர்/புகார்தாரர் சார்பாக வழக்கறிஞர் T.சிவசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதமும் கேட்டும் ஆவணங்களை பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யக்கோரி 348 BNSS –ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கடந்த 08.01.2021 ம் எதிர்மனுதாரர்/புகார்தாரர் முதல் விசாரணை செய்யப்பட்டு, மனுதாரர்/எதிரி தரப்பில்

புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும், இவ்வழக்கு காசோலையானது எதிர்மனுதாரர்/ புகார்தாரர் வசம் ஒப்படைக்கபட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் மேற்படி காசோலையை வைத்து O.S.No.90/2021 மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், கடந்த 23.12.2022 ம் தேதி இந்நீதிமன்றத்தில் இடப்பட்ட உத்தரவின் படி காசோலையை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/புகார்தாரர் தாக்கல் செய்தவுடன் காசோலையை வல்லுநர் கருத்துரைக்கு அனுப்ப வேண்டி Crl.m.p.No.9085/2023 மனுதாக்கல் செய்துள்ளதாகவும், அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், கடந்த 23.09.2025 ம் தேதியன்று வாதுரைக்கென வகை செய்யப்பட்ட நிலையில், மனுதாரருக்கு மூலம் என்பதால் ஆஜராக இயலவில்லை எனவும், வழக்கை கண்காணிக்க இயலவில்லை எனவும், வழக்கு தொகை செலுத்தப்பட்டுவிட்டது எனவும், ஆவணங்களை திருப்பி தரவில்லை என்பதால் காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு, அது CSR எண். 104/2016 என பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும், புகார்தாரரே ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது எனவும், அதன் மேல் சீராய்வு மனு நிலுவையில் உள்ளது எனவும், எனவே, எதிர்மனுதாரர்/புகார்தாரரை, மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு எதிர்வாதம்**

எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமெனவும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**3) தீர்மானிக்கப்படவேண்டியவை**

**மனுதாரர் கோரியவாறு இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதுவே ஆகும்.**

இவ்வழக்கில் கடந்த 2018 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 02.11.2018 அன்று இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 ன் கீழ் மனுவானது மனுதாரர்/ எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவானது கடந்த 07.06.2019 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 08.01.2021 அன்று புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 07.11.2022 வரை குறுக்கு விசாரணை செய்வது பற்றி மனுதாரர்/எதிரி தரப்பில் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அன்றைய தினம் இவ்வழக்கின் அசல் காசோலை O.S.No.90/2021 வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காசோலையை பு.சா.1 ன் குறுக்கு விசாரணையின் போது ஒப்படைக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது. கடந்த 17.02.2023 அன்று கு.வி.மு.ச 313 ன் கீழான விசாரணைக்கென வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 23.02.2023 அன்று கு.வி.மு.ச 313 ன் கீழான

விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிரி தரப்பு சாட்சியத்திற்கென வகை செய்யப்பட்ட நிலையில் கடந்த 05.04.2023 அன்று மீண்டும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 45 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவானது கடந்த 20.05.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு எதிரி தரப்பு சாட்சியத்திற்கென வகை செய்யப்பட்டு, மனுத்தாக்கல் செய்யப்படாததால் இருத்தரப்பு வாதத்திற்கென வகை செய்யப்பட்டு, இறுதி வாய்ப்பு என்ற நிலையில் கடந்த 20.06.2025 அன்று பிரிவு 94 BNSS ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவானதும் கடந்த 09.09.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மீண்டும் வாதுரைக்கென வகை செய்யப்பட்ட நிலையில், எதிரி தரப்பு ஆஜரின்மையால் தீர்ப்புரைக்கென வகை செய்யப்பட்ட நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்றுகொள்ளத்தக்கதாக இல்லை. இருப்பினும் இயற்கை நீதி கோட்பாட்டின்படி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் இம்மனு பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்/எதிரி தரப்பில் பு.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகும் அன்றையதினம் மேற்கொண்டு வேறு தேதிகளுக்கு ஒத்திவைக்க கோராமல் குறுக்கு விசாரணையை முழுவதும் செய்து முடிக்க வேண்டும் மற்றும் செலவு தொகையாக ரூ.10,000(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) த்தை புகார்தாரர் ஆஜராகும் அன்று அவருக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக இம்மனுவானது நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு என்னால் இன்று **17.10.2025** அவை அறிய பகரப்பட்ட உத்தரவு.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.17 18:26:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

1. மனுதாரர்/எதிரி தரப்பு சாட்சியம் சான்றாவணங்கள் எதுவும் இல்லை.
2. எதிர் மனுதாரர்/ புகார்தார் தரப்பு சான்றாவணங்கள் எதுவும் இல்லை.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.17 18:26:13 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.